www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsi11T

தென்காசி மாவட்டம்

முதல் திருப்புதல் தேர்வு - 2024

20-01-2024

-----

வகுப்பு 11

பொதுத்தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்: 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்க்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு: விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.**

**பகுதி - I**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14×1=14**

1) பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

அ) சிறுதேர் ஆ) சாழல் இ) சிறுபறை ஈ) சிற்றில்

2) ஒப்புரவு என்பதன் பொருள்

அ) ஊருக்கு உதவுவது ஆ) அடக்கமுடையது

இ) செல்வமுடையது ஈ) பண்புடையது

3) தஞ்சை பெரியகோவில் விமானம் .......... அடி உயரம் உடையது

அ) 214 ஆ) 216 இ) 247 ஈ) 126

4) கவிஞர் ஆத்மா நாம் இயற்பெயர்

அ) பெரியவன் கவிராயர் ஆ) சிவராமலிங்கம்

இ) மதுசூதனன் ஈ) அழகிய பெரியவன்

5) திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர்

அ) தமிழ்மாலை ஆ) பெரிய திருமொழி

இ) திருவெம்பாவை ஈ) நாச்சியார் திருமொழி

6) தமிழ்ப்பதிப்புலகின் தலைமகன் என்று போற்றப்படுபவர்

அ) ஆபிரகாம் பண்டிதர் ஆ) சிதம்பரநாதர்

இ) சீனி. வேங்கடசாமி ஈ) தாமோதரனார்

7) 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

அ) குறுந்தொகை ஆ) ஐங்குறுநூறு இ) நற்றிணை ஈ) அகநானூறு

8) 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர்அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

9) ஏமம் - பொருள் கூறுக.

அ) யாமம் ஆ) மருந்து இ) பாதுகாப்பு ஈ) முள்மரம்

10) பூஜை, விஷயம், உபயோகம் - என்பவை முறையே .......... என்று தமிழில் வழங்கப்படும்.

அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி

இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) வழிபாடு, பயன்பாடு, செய்தி

11) பகுபத உறுப்புகளுள் இதனை முதனிலை என்றும் அழைப்பர்?

அ) இடைநிலை ஆ) விகுதி இ) சாரியை ஈ) பகுதி

12) மனோன்மணீயம் நூலில் உள்ள கிளைக்கதை

அ) சிவகாமியின் சரிதம் ஆ) பாஞ்சாலிசபதம்

இ) சிவகாமியின் சபதம் ஈ) இரகசிய வழி

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



13) நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது

அ) காய்முன் நேர் ஆ) காய்முன் நிரை இ) கனி முன்நிரை ஈ) மாமுன்நேர்

14) பொருத்தமான இலக்கிய வடிவம் எது?

அ) ஏதிலிக் குருவிகள் - மரபுக்கவிதை ஆ) திருமலைமுருகன் பள்ளு - சிறுகதை
இ) யானைடாக்டர் - குறும்புதினம் ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** **3×2=6**

15) 'ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள' - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

16) காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

17) சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

18) எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** **2×2=4**

19) தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறுகுறிப்பு வரைக.

20) உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.

21) நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்தது விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்க.** **7×2=14**

22) **ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக**

அ) நீரோடை ஆ) தண்டுடை

23) **ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.**

அ) ஈன்ற ஆ) அணிந்தேன்

24) **பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

பொரி, பொறி

25) **பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.**

அ) Document ஆ) Culture

26) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

நஞ்சிருக்கும்

27) **மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக.**

அ) ÿ ஆ) y̎

28) **மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (ஒன்றனுக்கு மட்டும்)**

அ) எதிர்நீச்சல் ஆ) நிறை குடம்

29) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

பள்ளிகூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத்துறை கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகையக் கல்வியேப் பயனளிக்குமென்றும் போப் கருதினார்

30) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2×4=8

31) சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32) தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

33) உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

34) வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2×4=8

35) 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

36) ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப் பகுதி வழி எடுத்துக்காட்டுக.

37) ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

38) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3×4=12

39) உவமை அணி (அல்லது) சொற்பொருள் பின்வரும் நிலையணியை விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.**

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம் தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம் தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அதுவேண்டும்

- நாமக்கல் கவிஞர்

41) யானைக்கும் அடிசறுக்கும் (அல்லது) கூடிவாழ்ந்தால் கோடி நன்மை - பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

42) **புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)

அ) எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும்

ஆ) அடிக்கவும் செய்யலாம்; கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம்

இ) கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம்

ஈ) அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவே தான்.

43) **தமிழாக்கம் தருக.**

1. A picture is worth a thousand words.
2. Nobody can hurt me without my Permission.
3. Work while you work and play while you play
4. Culture does not make people; People make culture.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43) **காது கேளாதவர்களுக்கான மாற்றுவினா**

நகராட்சிப் பள்ளி ஆசிரியராக நெடுங்காலம் பணியாற்றிய அவர் தன்னுணர்வால், உறுதியான உழைப்பால் தமிழ்ப்பற்றால் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார். ஆங்கிலம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். சிறந்த வரலாற்று ஆசிரியர், நடுநிலை பிறழாத ஆய்வாளர், மொழியியல் அறிஞர், இலக்கியத் திறனாய்வாளர் என்றெல்லாம் போற்றப்பட்ட பன்முகச் சிறப்புக் கொண்டவர். அவருக்கு மதுரைப் பல்கலைக்கழகம் 1980-ஆம் ஆண்டு 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் பட்டமளித்துப் பாராட்டியது. கிறித்தவமும் தமிழும், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், மறைந்து போன தமிழ் நூல்கள் போன்ற பல நூல்களால் தமிழ் ஆய்வு வரலாற்றில் மயிலை. சீனி. வேங்கடசாமி அழியாச் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

**வினாக்கள்:**

அ) மயிலை சீனி வேங்கடசாமியின் பன்முகச் சிறப்புகள் யாவை?

ஆ) பத்தியில் இயைபு நயம் பொருந்திய சொற்களை எடுத்து எழுதுக.

இ) அழியாச் சிறப்பிடம் - இலக்கணக் குறிப்புத் தருக.

ஈ) நகராட்சிப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர் - அவர் யார்?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் இருபக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44) அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப்பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலியத்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

45) அ) பௌத்தக்கல்வி, சமணக்கல்வி, மரபு வழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்விமுறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.

46) அ) 'வாடிவாசல்' கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

சிவக்குமார், மு,
ஸ்ரீராம் மெட்ரிக் மேநிப
வல்லம்-627809
தென்காசிமாவட்டம்.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4+2=6**

47) அ) அம்ம வாழி ..... எனத் தொடங்கும் குறுந்தொகை பாடல்

ஆ) நன்று - என முடியும் குறள்.

- - - - - -

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com